2003 ஏப்ரல் 11]

அப்படியென்றால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உன்னத திட்டமான ஒருகால பூஜைத் திட்டத்தின்கீழ் இந்தக் கோயிலும் சேர்க்கப்பட்டுள்ளதா? மேலும், வருமானமே இல்லாத இந்தக் கோயிலுக்கு உண்டான நிலபுலன்கள் 20 ஏக்கர் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருந்தார்கள். அப்படி வருமானமே இல்லாத இந்தத் திருக்கோயில் பயன்பெறுகின்ற வகையிலே அந்த நிலங்களை உரியவர்களிடமிருந்து மீட்டு, அவற்றை விற்று அதிலிருந்து கிடைக்கின்ற பணத்தை fixed deposit செய்து அதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்திலிருந்து மாதா மாதம் அந்தக் கோயிலினுடைய அன்றாட செலவுகளுக்கும் பயன்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலமே இன்னமும் யாரிடம் இருக்கிறது என்பது இங்கே உள்ள கோப்புகளிலே இல்லை. அதை வசதி படைத்தவர்கள் யார் யார் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அதன்பின் அந்த நிலங்களை எடுத்து, அங்கே வருகின்ற வருவாயை வைத்து ஆலயங்களுக்கு பூஜைகள் செய்வதற்கும், திருப்பணிகள் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அது மட்டுமல்லாமல் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 25,000 ரூபாய் ஒரு ஆலயத்திற்கு, நலிவுற்ற ஆலயத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டு இருக்கின்ற அந்த அடிப்படையில், வசதியில்லாத அந்த ஆலயங்களுக்கு திருப்பணி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஒருகால பூஜைகூட செய்யப்படாமல் இருக்கின்ற ஆலயங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த ஆலயங்களுக்கு ஒரு கால பூஜை செய்வதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 246, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**246—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***1920—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 11

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், திருநல்லூர் மற்றும் ஒரத்தநாடு ஒன்றியம், மேலஉளூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளையும் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், திருநல்லூர் மற்றும் ஒரத்தநாடு ஒன்றியம், மேலஉளூர் கிராமங்களில் செயல்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் தற்போது இல்லை.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவோணம் ஒன்றியத்தில் முறைப்படுத்தப்பட்ட ஒன்றிய நவீன மருந்தகங்கள் மூன்று செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு மருத்துவமனைக்கு அங்கே பணியாற்றுகின்றவர்களுக்கு ஆகின்ற செலவு ஒரு மாதத்திற்கு 33,000 ரூபாய் ஆகும். அந்த மருத்துவமனைக்கு மருந்து வாங்குவதற்கு 10,000 ரூபாய் மட்டும்தான் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 10,000 ரூபாயில் ஓர் ஆண்டுக்கு அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பதற்குச் சரியான நிலை இல்லாத காரணத்தாலும், அந்த ஒன்றியத்தில் மூன்று மருத்துவமனைகள் இருக்கின்றபோது, ஓர் ஆண்டுக்கு ஏறத்தாழ 12,20,000 ரூபாய் செலவு ஆகிறது. அந்தப் பகுதியினுடைய நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அந்த ஒன்றியத்திலே பொது நிதியும் கிடையாது. சிறிய ஒன்றியமாக, 30 ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒன்றியப் பகுதியாக இருக்கிறது. அந்தக் காரணத்தினாலும் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து, அந்தப் பகுதி மக்களுடைய வளர்ச்சிக்காகவும், அந்த ஒன்றியத்தில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு, நிதியைப் பெறுவதற்கு வழிவகை செய்கின்ற முகத்தான், இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்தகால ஆட்சியிலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மருத்துவமனைகளைத் தரம் உயர்த்தி, ஆரம்ப சுகாதார நிலையமாக

உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்து, எங்களுக்குச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இதுபோன்ற மருந்தகங்கள் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், எப்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பற்றாக்குறையின் காரணமாக அந்த மருத்துவமனைகளை நடத்துவதற்கு முடியவில்லையோ அதே நிதித் தட்டுப்பாடுதான் இந்தத் துறைக்கும் இருந்து வருகிறது. ஏற்கெனவே 200-க்கு மேற்பட்ட இதுபோன்ற ஒன்றிய மருந்தகங்கள் சுகாதாரத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டு, அந்த மருத்துவமனைகள் இன்னும் அதே நிலையில், எந்த விரிவாக்கமும் செய்யப்படாமல் இருந்து வருகின்றன. அதற்குக் காரணம் நிதிப்பற்றாக்குறைதான். எனவே அப்படி மருந்தகங்களை எங்களுடைய துறை எடுத்துக்கொள்கிறபோது, அதிலே இருக்கின்ற டாக்டர்கள், பணியாளர்கள் ஆகியோரையும் சேர்த்துத்தான் நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காக கூடுதல் பணியிடங்களை உருவாக்க வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே இதுதான் எடுத்துக்கொள்ள முடியாமைக்குக் காரணம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, இதுபோன்ற மருந்தகங்களை இந்தத் துறை எடுத்துக்கொள்வதற்கு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, தக்க முடிவுகளை எடுப்பதற்கு எங்களுடைய துறை தயாராக இருக்கிறது. இல்லையென்றால், புதிதாக மக்கள்தொகைக் கணக்கெடுப்பு முடிந்தவுடன் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கிறபோது இந்த மருந்தகங்கள் இருக்கிற இடங்களிலே புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகிற அந்தக் கால கட்டத்திலே இந்த மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கு எங்களுடைய துறை நிச்சயமாக முயற்சிகளை மேற்கொள்ளும்.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து தருவோம்

சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** நன்றிக்கு நன்றி. *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் செயல்படுகின்ற அந்த மருந்தகங்களுக்கு நிதித் தட்டுப்பாடு இருப்பது போல், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும் இருப்பதால் உயர்த்த முடியவில்லை என்ற பதிலைக் கூறியிருக்கின்றார்கள். என்றாலும் பொதுமக்களின் நலன் கருதி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களும் D.P.H. அவர்களுக்குக் கருத்துரு அனுப்பியுள்ளனர். அவ்வாறு அனுப்பப்பட்டுள்ள கருத்துருக்களில் என்னுடைய தொகுதியில் அவியூர் ஊராட்சியில் இயங்குகின்ற ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கிற கொள்கை முடிவோ, செயல்குறிப்போ இல்லாத காரணத்தினாலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இந்த ஆண்டு ஏற்படுத்த இயலவில்லை. அப்படிப் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்துகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *247*, திரு. சோ. இராசேந்திரன், அவையிலே இல்லை. ஆகவே வினா எண் *248* எடுத்துக்கொள்ளப்படுகிறது.